கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருமங்கலம்

**08.11.2022**

**அசல் வழக்கு எண். 26/2019**

**வா.சா. 1 – மருகான்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆரம்பித்த நேரம் : 2.50 PM**

நான் இந்த வழக்கின் வாதி என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து சம்மந்தப்பட்ட பிராதில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் சரி என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் எங்கள் வழக்குப்படி என் தகப்பனார் நாகமலைமூப்பர் பெயரில் கிரையமாக பெறப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி அழகன் என் உடன்பிறந்த சகோதரர் என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்கள் தொடர்பாக ஆவணங்களை உற்பத்தி செய்துவிட்டதாக சொல்கிறேன். என் அப்பா நாகமலை மூப்பர் எந்த வருடம் இறந்தார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. நான் அப்பொழுது சிறுவனாக இருந்தேன். என் அப்பா பெயரில் உள்ள வா.சா.ஆ.1 அசலான 1973ம் வருட கிரையப்பத்திரம் என் தகப்பனாராருக்கு பின்பு எவ்வாறு 1ம் பிரதிவாதியிடம் போய் சேர்ந்தது என்பதற்கான விளக்கம் எதுவும் என் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு தற்போது என்ன வயது என்று கேட்டால் தோராயமாக 55 வயதாகிறது. என் வயதைக் காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் இல்லை. என் அப்பா இறந்தபிறகு நான் மேஜரானபிறகு நானும், 2ம் வாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதியிடம் அசல் பத்திரம் உன்னிடம் உள்ளது என்றும் அதனை என்னிடம் கொடுத்துவிட வேண்டும் என்றும் அதனை வைத்துக் கொண்டு நீ முறையற்ற வில்லங்க விற்கிரையங்கள் எதுவும் செய்யக்கூடாதென நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்று கேட்டால் 15 வருடத்திற்கு முன்பாக நேரடியாக போய் அவரிடம் என் தகப்பனார் பெயரில் உள்ள ஆவணத்தை கேட்டபோது அசல் பத்திரம் தன் கைவசம்

இல்லை என்று 1ம் பிரதிவாதி சொல்லி விட்டார். வா.சா.ஆ.2 ஆவணம் எந்த தேதியில் எழுதி பதிவு செய்யப்பட்டது என்று கேட்டால் நான் பதிந்து கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல. அதில் பதிவாளருக்கு முன்பாக கைரேகை வைத்ததாக சொல்லியுள்ள கைரேகை என்னுடையதா என்று கேட்டால் இல்லை. வா.சா.ஆ.2ல் கண்டுள்ள எழுதி பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவணம் பற்றி எந்த வருடம், எந்த மாதம், எந்த தேதியில் நான் தெரிந்து கொண்டேன் என்று கேட்டால் என்னால் சொல்ல முடியாது. இது சம்மந்தமாக நாங்களும், 1ம் பிரதிவாதியும் பஞ்சாயத்து பேசியதாக சொல்லியுள்ளதில் எந்த தேதியில், எங்கு வைத்து யார், யார் பஞ்சாயத்து பேசினார்கள் என்று கேட்டால் பெரியசாக்கிலிபட்டி மற்றும் எங்கள் ஊரைச் சேர்ந்த பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து நடந்தது. கிராமத்தில் தேதியை கணக்கில் வைத்துக் கொள்ள மாட்டோம். நாங்கள் பஞ்சாயத்து பேசினால் தேதியை ஞாபகம் வைத்துக் கொள்ள மாட்டோம், சொல்லவும் மாட்டோம். அதேபோல் யார் யார் அந்த பஞ்சாயத்தில் பேசினார்கள் என்று கேட்டால் சாக்கிலிபட்டியில் இருந்து பஞ்சாயத்து தலைவர் பாலமுருகன், எங்கள் ஊரைச்சேர்ந்த கருப்பையா ஆகியோர்கள் மற்றும் நிறைய பேர் இருந்து பேசினார்கள். பிரதிவாதிகள் எங்களை அடிக்க வந்ததால் பஞ்சாயத்தில் முடிவு ஏற்படாமல் கலைந்து செல்லப்பட்டது. பஞ்சாயத்து தலைவர் பாலமுருகன், எங்கள் ஊரைச்சேர்ந்த கருப்பையா ஆகியோர்களுடன் வேறு யார் உடன் இருந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்று கேட்டால் சொல்ல முடியாது. நான் என்னுடைய வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் எந்த தேதியில் யார் முன்னிலையில், எங்கு வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டது என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் நாங்கள் சொல்லுகின்ற ஆட்சேபனைக்குரிய வா.சா.ஆ.2 பத்திரம் சம்மந்தமாக எந்த தேதியில் எங்களுக்கு வா.சா.ஆ.2 இருப்பது தெரியவந்தது

என்ற விபரமும் வழக்குரையிலும், முதல் விசாரனையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மோசடியாக என் அண்ணன் 1ம் பிரதிவாதி பத்திரம் போட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகும். வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு 1ம் பிரதிவாதி அழகனுக்கு மட்டும்தான் அனுப்பப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காவல்துறைக்கும் மோசடி பத்திரம் சம்மந்தமாக வா.சா.ஆ.3 மூலமாக தகவல் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பினை தவிர காவல் துறையில் வா.சா.ஆ.2 சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் கிரிமினல் நடவடிக்கை எடுக்க உள்ளதாக சொல்லியுள்ளதால் வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பினை 1ம் பிரதிவாதி மீது காவல் துறையிடம் கொடுத்த புகாராக எடுத்துக்கொள்ள இயலாது என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்தில் பேசிய சாக்கிலிபட்டி பஞ்சாயத்து தலைவர் பாலமுருகனை விசாரித்தால் உண்மை சங்கதிகள் தெரிந்து கொள்ள முடியும் என்று சொன்னால் சரிதான். என் அப்பா பெயரில் உள்ள பத்திரத்தை தவிர தாவா சொத்தின் மீது எங்களுடைய அனுபவத்தை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 2005ல் வா.சா.ஆ.2ல் சொல்லப்பட்ட தேதியில் சொல்லப்பட்டபடி அதில் கண்டுள்ள சாட்சிகள் முன்னிலையில் முறையாக 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னால் எழுதிக் கொடுக்கவில்லை. அதேபோல் வா.சா.ஆ.2 பத்திரத்தில் பதிவு செய்யப்படும்போது பதிவுத்துறை அதிகாரி முன்னிலையில் நான் கையெழுத்து இட்டும், கைரேகையும் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் அவ்வாறு நான் கையெழுத்திடவில்லை, கைரேகையும் பதிவு செய்யவில்லை. வா.சா.ஆ.2 பத்திரம் வழக்கு தாக்கல் செய்யும்போது நான்தான் என்னுடைய பெயரில் மனு செய்து அதன் நகலை வாங்கி நீதிமன்றத்தில்

வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமான சார்பதிவாளர் நகலை பெறுவதற்கு பதிவாளர் அலுவலகத்தில் எந்த தேதியில் மனு செய்தேன் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 மோசடியானது என்று தெரியவந்து எத்தனை வருடம் இருக்கும் என்று கேட்டால் 3 வருடங்கள் இருக்கும். நான் வா.சா.ஆ.2 ஆவணத்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதி பதிவு செய்து கொடுத்துவிட்டு பின்னால் குடும்பத்தில் ஏறபட்ட மனக்கசப்பு காரணமாக 1ம் பிரதிவாதி மோசடியாக வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தியதாக வழக்குரையிலும், சாட்சியத்திலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் ஊர் காளியம்மன் கோவிலில் நானும், என் அண்ணன், தம்பி, பங்காளிகள் அனைவரும் சேர்ந்து சாமி கும்பிடுவோம் என்று சொன்னால் சரிதான். நாளது தேதிவரை புரட்டாசி மற்றும் இதர விசேச நாட்களில் காளியம்மன் கோவிலில் நடைபெறும் திருவிழாக்களில் நானும், என் சகோதரரும் சேர்ந்துதான் விழாக்களில் பங்கு கொண்டு சாமி கும்பிட்டு வருகிறோம் என்று சொன்னால் சரிதான். என் அண்ணன் மோசடியாக வா.சா.ஆ.2 பத்திரம் ஏற்படுத்தியிருந்தால் கோவில் திருவிழாக்களில் என் அண்ணனான 1ம் பிரதிவாதியுடன் ராசியாக இருந்து சாமி கும்பிட மாட்டோம் என்றும், எனவே மோசடியாக வா.சா.ஆ.2 பத்திரம் ஏற்படுத்தியதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு காலாவதி தோசத்தால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எந்த காலத்திலும் பிரதிவாதிகளுடன் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும், அதனால் சமூகம் நீதிமன்றத்தில் சரியான நீதிமன்ற கட்டணம் செலுததாமல் கூட்டு அனுபவத்தில் இல்லாத நிலையில் பொய்யான சங்கதிகளை சொல்லி தாவா வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னுடைய வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**முடிவடைந்த நேரம் : 3.50 PM**

Sd/– Marukan

Sd/–G.Ramasankaran,
ADM, Thirumangalam.